வென்ற்வேத்வில் தமிழ்க்கல்வி நிலையம்

WENTWORTHVILLE

TAMIL STUDY CENTRE

# தமிழ் அறிவுப் போட்டி 2019

# ஆண்டு 7

# மாதிரி வினாக்கள்

1. புதல்வன் என்பதற்கு ஒத்த கருத்துள்ள சொல் ஒன்று கூறுக?

**<u>விடை:</u>**

**புத்திரன்**

**(மைந்தன், மகன்)**

2. “வாழ்க நிரந்தரம் வாழ்க தமிழ்மொழி”

என்று தொடங்கும் பாடலை இயற்றியவர்

யார்?

**விடை:**

பாரதியார்

3. விளையாடுகின்றார்கள் என்பது நிகழ்காலம்.

இதனை இறந்தகாலத்தில் எப்படி கூறலாம்?

**விடை:**

# விளையாடினார்கள்

4. தலைமுறை தலைமுறையாக நமது முன்னோர்கள் வாழ்ந்த இடத்தை எப்படி அழைப்போம்?

**விடை:**

# பூர்வீகப் பிரதேசம் / தாயகம் / புலம்

5. அவுஸ்திரேலியாவிலிருந்து வெளிவரும் ஒரு தமிழ்ச் சஞ்சிகையின் பெயர் தருக.

**<u>விடை:</u>**

# தமிழோசை

# (தென்றல், மெல்லினம், இளவேனில்)

6. பழந்தமிழரின் பெருமைக்குக் காரணமாக அமைந்த இரு கலைகளைக் கூறுக?

**<u>விடை:</u>**

**சிற்பக் கலை**

**ஓவியக் கலை**

**(கட்டடக் கலை, நாட்டியக் கலை)**

7. தமிழர்களின் வாழ்க்கை முறையில் தற்போது மாற்றங்கள் ஏற்படுவதற்கு முக்கிய காரணி யாது?

**விடை:**

# பிற கலாசாரச் செல்வாக்கு

8. மாமல்லபுரத்தின் சிறப்பு என்ன?

**<u>விடை:</u>**

# சிற்பக் கலைக்குப் பெயர் பெற்றது

9. எழுத்துப்பிழையற்ற சொல்லைத் தெரிவு செய்க.

1. ஆசரியார்
2. ஆசிறியர்
3. ஆசிரியர்

**<u>விடை:</u>**

3. ஆசிரியர்

10. நிலம் என்ற சொல்லிற்கு பொருத்தமான ஒத்த கருத்துள்ள சொல்லைத் தெரிவு செய்க?

1. ஆகாயம்
2. தரை
3. தண்ணீர்

**<u>விடை:</u>**

2. தரை

11. அட்டாவதானியால் ஒரே சமயத்தில்

எத்தனை விடயங்களை அவதானிக்க

முடியும் எனக் கூறப்படுகிறது?

**<u>விடை:</u>**

# 8 விடயங்கள்

12. பாடல்களால் எழுதப்பட்ட கதை நூலை எவ்வாறு அழைப்பார்கள்?

1. புத்தகம்
2. காப்பியம்
3. சிறுகதை

**<u>விடை:</u>**

2. காப்பியம்

13. தமிழர் பண்பாட்டில் இரண்டைக் கூறுக?

**<u>விடை:</u>**

# விருந்தோம்பல்

# பெரியோரை மதித்தல்

## (தாய் தந்தையரைப் பேணுதல், வந்தாரை வரவேற்றல், பிறருக்கு உதவுதல்)

14. வெள்ளிவிழா எப்போது கொண்டாடப்படும்?

1. 25 ஆவது ஆண்டு தொடக்கத்தில்

2. 25 ஆவது ஆண்டு நடுவில்

3. 25 ஆவது ஆண்டு நிறைவில்

**விடை:**

# 3. 25 ஆவது ஆண்டு நிறைவில்

15. ஐம்பெருங் காப்பியங்களில் ஒன்றான குண்டலகேசி என்னும் நூல் தமிழ்த் தாயின் எந்த அணிகலனாகப் போற்றப்படுகின்றது?

**விடை:**

# குண்டலம் / தோடு

16. தமிழ்க் கலைகள் இரண்டைக் கூறுக?

**<u>விடை:</u>**

**நாட்டியம், கோலாட்டம்**

**(மயிலாட்டம் / நாடகம் / பேச்சு / …..)**

17. இனிப்பு, புளிப்பு, உவர்ப்பு,

துவர்ப்பு, கார்ப்பு, கசப்பு

ஆகியன ...

1. ஐம்பொறிகள்

2. ஐம்பூதங்கள்

3. அறுசுவைகள்

**<u>விடை:</u>**

3. **அறுசுவைகள்**

18. தமிழ் எழுத்துக்கள் நான்கு வகைப்படும்.

*அதில் ஒன்று மெய் எழுத்து*

*இன்னொன்று உயிர் எழுத்து.*

மற்றைய இரண்டையும் கூறுக?

**<u>விடை:</u>**

## ஆய்த எழுத்து (ஆயுத எழுத்து)

## உயிர்மெய் எழுத்து

19. குயில் கூவும் என்பது போல் யானை ...........?

1. கர்ச்சிக்கும்

2. பிளிறும்

3. சீறும்

**<u>விடை:</u>**

2. பிளிறும்

20. புலம் பெயர் தமிழர்கள் தமது

கலாசாரத்தையும் பண்பாட்டையும்

கட்டிக் காத்து வரும் இரண்டு

முறைகளைக் கூறுக?

**விடை:**

கலை கலாசார நிகழ்வுகள்

ஆலயங்கள்

(தமிழ்ப் பாடசாலைகள், தமிழ்க் கலைகளைக் குழந்தைகளுக்குக் கற்பித்தல்)

21. இந்த இசைக் கருவியின் பெயர் என்ன?



**விடை:**

# பறை

22. தமிழிலுள்ள உயிர் எழுத்துக்களில் குற்றெழுத்துக்கள் அல்லது குறில்கள் எவை?

**விடை:**

# அ , இ , உ , எ , ஒ

23. பின்வரும் சொல்லைப் பிரித்துக் கூறுக?

# மூவாயிரம்

**விடை:**

# மூன்று + ஆயிரம்

24. ஒரு கிழமையில் அல்லது வாரத்தில் உள்ள ஏழு நாட்களினதும் பெயர்களைக் கூறவும்?

**விடை:**

**ஞாயிறு - திங்கள் - செவ்வாய் - புதன் - வியாளன் - வெள்ளி - சனி**

25. பின்வரும் பழமொழியை முடித்துவைக்கவும்.

முயற்சி உடையார் ....................?

**<u>விடை:</u>**

## இகழ்ச்சி அடையார்